**STC.No.99/2019          நாள்: 08.10.2025**

ம.சா.1- ராஜாங்கம், த/பெ.கணபதி

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**குறுக்கு விசாரணை:**

1. நான் டிப்பர்லாரியை வைத்து கட்டுமானப் பொருட்கள் விநியோகிக்கும் தொழில் செய்து வருகிறேன். எதிரி மினரல்வாட்டர் கம்பெனி வைத்துள்ளார். எதிரிக்கு தொழில் ரீதியாக பொருட்கள் சப்ளை செய்த விதத்தில் எதிரி எனக்கு பழக்கம். எதிரியுடன் இதற்கு முன்பு வரவு செலவு வைத்துள்ளேன். எதிரியுடன் ஒரு வருடமாக பல தவணைகளில் வரவு செலவு செய்துள்ளேன். மேற்படி பணபரிவர்த்தனைகளை பணமாகத்தான் பெற்றுக் கொண்டேன். காசோலையில் கண்ட தொகையான ரூ.17,000/-யை கைமாத்தாக கொடுத்தேன். மேற்படி ரூ.17,000/-தை தொழில் தேவைக்காக எதிரி பெற்றதாக சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். கடந்த 03.09.2017-ல் ரூ.17,000/-தை எதிரி கைமாத்தாக பெற்றுக் கொண்டார்.

2. எதிரி கடன் கேட்ட அன்றே பணத்தை கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை, முந்தைய நாள் கேட்டார் மறுநாள் கொடுத்தேன். நான் மேற்படி கடன் தொகையை பணமாகத்தான் கொடுத்தேன். எதிரியின் முழுப்பெயர் பிரிட்டோ என்று தான் தெரியும். எதிரிக்கு பணத்தை நம்பியிக்கையின் பேரில்தான் கொடுத்தேன், சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை. நான் பணம் கொடுத்தவுடனேயே எதிரி அவராகவே தான் காசோலையை கொடுத்தார். மேற்படி காசோலையை எதிரி ஒரு மாதம் பின்தேதியிட்டு எனக்கு கொடுத்தார். எதிரியின் செல்போன் எண் எனக்கு தெரியும். எதிரியுடன் 5 வருடமாக பேச்சு வார்த்தை இல்லாததால் போன் நம்பர் எனக்கு நியாபகமில்லை, போனை பார்த்து தான் சொல்லமுடியும்.

3. எதிரியின் போன் நம்பர் எனக்கு தெரியாது என்றும் எதிரியுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லாததால் தான் எனக்கு தொலைபேசி எண் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு என்னை யாரென்று தெரியாது என்றால் சரியல்ல. முருகானந்தத்திடம் தான் எதிரி பரிவர்த்தனைகள் செய்தார் என்றும் முருகானந்தத்திடம் எதிரி கொடுத்த காசோலையை பெற்று தான்

நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு மணல் இறக்குவதற்காக முருகானந்தத்திடம் பூர்த்தி செய்யப்படாத கையெழுத்து மட்டும் செய்யப்பட்ட காசோலையை எதிரி கொடுத்திருந்தார் என்றும் அதை பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலையில் தொகை ஏற்கனவே எழுதப்பட்டிருந்ததால் என்னால் கூடுதல் தொகை எழுத முடியவில்லை என்றும் அதனால் என் பெயரை மட்டும் நிரப்பிக் கொண்டு முருகானந்தத்திடம் எதிரியின் முகவரியை பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரியின் உண்மையான முழுப்பெயர் மரிய மைக்கேல் பிரிட்டோ என்றால் தெரியாது, பிரிட்டோ என்று தான் நான் அவரை அழைப்பேன். நான் காசோலை தொடர்பாக அறிவிப்பு அனுப்பிய பிறகுதான் எதிரி முருகானந்தத்திடம் கேட்டு வழக்கு பற்றிய விவரத்தை தெரிந்து கொண்டார் என்றால் தெரியாது. அதற்கு முருகானந்தம் எனக்கும் முருகானந்தத்திற்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கலுக்காக தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளதாக முருகானந்தம் எதிரியிடம் சொன்னார் என்றும் என்னிடம் பேசி வழக்கை முடித்துவிடுவதாக சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. முருகானந்தத்திடம் பேச்சு வார்த்தை நடந்ததால் தான் ஒரு மாதம் கழித்து அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல.

5. நான் காசோலையை 19.11.2017-ல் வசூலுக்காக தாக்கல் செய்தேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டாரா அல்லது வேறு யாரும் பெற்றுக் கொண்டார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வேறு நபர்தான் பெற்றுக் கொண்டார் என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு அனுப்பப்படாததால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த பணபரிவர்த்தனைகளும் நடக்கவில்லை என்றும் எதிரிக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் கண்ட ரூ.17,000/-த்தை எதிரி பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதுஅல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை</u>**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.